**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK.

**Prosecution witness (PW1)**

**STC No. 188/2025**

Name : பிரதீப்குமார் (PW1)
**Date : 24.03.2026**
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இந்த வழக்கின் புகார்தாரர் எனக்கு எத்தனை பழக்கம் என்றால் சுமார் 10 வருடங்களாக தெரியும். புகார்தாரர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் அரசி மெடிக்கல் மற்றும் அரசி பேன்சி ஸ்டோர் வைத்துள்ளார். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் இன்சூரன்ஸ் ஏஜென்ட் மற்றும் கார் டீலிங் செய்து வருகிறேன். எனது வீடு அரச்சலூர் மாரியம்மன் கோவில் பின்புறம் உள்ளது என்றால் சரிதான், ஸ்டேட் பேங்க் பேங்க் பின்புறம் உள்ளது. எனது அப்பா அரச்சலூர் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளார் என்றால் சரிதான். அருணாச்சலம் என்பவர் குடும்ப நண்பரா என்றால் அவர் உள்ளூர்க்காரர். இதுவரை நான் அவர் வீட்டிற்கு சென்றததில்லை.

2. அவரும் எனது வீட்டிற்கு வந்தததில்லை. பணம் வாங்கும் போது வந்துள்ளார். நான் இன்சூரன்ஸ் ஏஜென்ட் மற்றும் கார் டீலிங் செய்து வருவதற்காக அடையாள அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அருணாச்சலம் போல அரச்சலூரில் எத்தனை நபர்களுக்கு பணம் கொடுத்துள்ளேன் என்றால் இவரை தவிர வேறு யாருக்கும் நான் கொடுத்ததில்லை. கடனுக்கு ஆதரவாக என்ன ஆவணம் வாங்கினேன் என்றால் காசோலை வாங்கினேன்.

3. 2017 ல் என் அப்பாவிடம் ரூ.4,80,000/- தொகையை எதிரி பெற்றுகொண்டு அதனை கடந்த 21.08.2023 அன்று பஞ்சாயத்தார் முன்னிலையில் TKS பெட்ரோல் பங்கில் வைத்து ரூ.2,40,000 ஆக எனது தந்தை பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக எனது தந்தை full and final settlement என்று ஒரு ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றும், அந்த ஆவணம் ஏற்படுத்தியதற்கு பிறகு எதிரியின் காசோலை என் வசம் இருந்ததை வைத்து பொய்யாக இந்த வழக்கு எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தனிப்பட்ட முறையில் 29.01.2024 ல் கடன் கொடுத்தேன். என் அப்பாவை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.24 17:54:09 +0530